V10SS

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
மூன்றாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

-----

வகுப்பு 10

கால அளவு: 3.00 மணிநேரம் சமூக அறிவியல் மதிப்பெண்கள்: 100

பகுதி - I

14x1=14

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1) யாருடைய ஆக்ரமிப்பால் மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று?
அ) ஹெர்மன் கோர்ட்ஸ் ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
இ) தௌசெயின்ட் லாவெர்ட்யர் ஈ) முதலாம் பெட்ரோ

2) எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது?
அ) 1979 ஆ) 1989 இ) 1990 ஈ) 1991

3) திருச்சிராப்பள்ளி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?
அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர்
இ) வீரபாண்டிய கட்டபொம்மன் ஈ) கோபால நாயக்கர்

4) 'நிலம் கடவுளுக்குச் சொந்தம்' என்று அறிவித்ததுடன் நிலத்தின் மீது வரிவிதிப்பதோ வாடகை வசூலிப்பதோ இறைச்சட்டத்திற்கு எதிரானது எனக் கூறியவர் யார்?
அ) டிடுமீர் ஆ) சித்து
இ) டுடுமியான் ஈ) ஷரியத்துல்லா

5) "அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமையகளாக இருப்பதை விட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது" எனக் கூறியவர் யார்?
அ) அன்னிபெசன்ட் ஆ) M. வீரராகவாச்சாரி
இ) B.P. வாடியா ஈ) G.S. அருண்டேல்

6) சேஷாசலம் உயிர்கோளப் பெட்டகம் அமைந்துள்ள மாநிலம் ..........
அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப்பிரதேசம்
இ) மத்தியப் பிரதேசம் ஈ) கர்நாடகா

7) இந்தியாவில் முதல் அணு மின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம் ...........
அ) குஜராத் ஆ) இராஜஸ்தான் இ) மகாராஷ்டிரம் ஈ) தமிழ்நாடு

8) தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் ...........
அ) பெங்களூரு ஆ) சென்னை இ) புதுடில்லி ஈ) ஹைதராபாத்

9) தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் ...........
அ) தர்மபுரி ஆ) வேலூர் இ) திண்டுக்கல் ஈ) ஈரோடு

10) தமிழ்நாட்டின் மிகப்பெரிய நீர்மின் சக்தி திட்டம்
அ) மேட்டூர் ஆ) பாபநாசம் இ) சாத்தனூர் ஈ) துங்கபத்ரா

11) மேலவை உறுப்பினராவதற்கு குறைந்தபட்ச வயது ............
அ) 25 வயது ஆ) 21 வயது இ) 30 வயது ஈ) 35 வயது

12) இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிரந்து கொள்கிறது?
அ) வங்காளதேசம் ஆ) மியான்மர் இ) ஆப்கானிஸ்தான் ஈ) சீனா

13) உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக்கொண்ட ஒரே மாநிலம்
அ) கேரளா ஆ) ஆந்திரப்பிரதேசம்
இ) தமிழ்நாடு ஈ) கர்நாடகா

14) இந்தியாவில் வருமானவரிச்சட்டம் முதன்முதலில் ........... ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) 1860 ஆ) 1870 இ) 1880 ஈ) 1850

பகுதி - II

10x2=20

குறிப்பு : i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.
ii) வினா எண் 28 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

15) முஸ்தபா கமால்பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?
16) மார்ஷல் திட்டம் என்றால் என்ன?
17) சமூகச் சீர்திருத்தங்களுக்கு மகாதேவ் ரானடேயின் பங்களிப்பை குறிப்பிடுக.
18) தென்னிந்திய மக்களுக்காக கால்டுவெல்லின் பங்களிப்பினை நன்கு புலப்படுத்துக.
19) இந்தியாவின் மேற்கு, கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.
20) வேளாண்மை - வரையறு.
21) தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
22) கோயம்புத்தூர் ஏன் 'தமிழ்நாட்டின் மான்செஸ்டர்' என அழைக்கப்படுகிறது?
23) உச்சநீதிமன்ற நீதிபதி தகுதிகள் யாவை?

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



24) சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
25) தனிநபர் வருமானம் என்றால் என்ன?
26) FAO வின் படி உணவு பாதுகாப்பை வரையறு.
27) அரசுக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்?
28) ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்க.

10x5=50

## பகுதி - III

**குறிப்பு : i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**ii) வினா எண் 42 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
i) பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸ் பிரதமர் ............
ii) ஒரு பைசா தமிழன் பத்திரிக்கையைத் துவக்கியவர் ..........
iii) இந்தியாவின் முக்கிய இறக்குமதிப் பொருள் ..............
iv) இமயமலையில் உள்ள ஒரு சிறிய முடியாட்சி நாடு ............
v) நூற்றுக்கணக்கான தோல் மற்றும் தோல் பதனிடும் வசதிகள் தமிழ்நாட்டில் .......... மாவட்டத்தை சுற்றி அமைந்துள்ளன.

30) உலகப்போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் (1919 - 1939) இந்தியாவில் காலனிய நீக்க செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க.
31) சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மாசே துங்கின் பங்களிப்பை அளவிடுக.
32) சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி.
33) **வேறுபடுத்துக.**
i) ராபி பருவம் மற்றும் காரிப்பருவம்
ii) தாமிரபரணி மற்றும் காவிரி
காரணம் கூறுக (iii) கடலூர் ஒரு பல்வழி பேரழிவு மண்டலம்
34) இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.
35) தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.
36) இந்தியக் குடியரசுத் தலைவரின் சட்டமன்ற மற்றும் நீதி அதிகாரங்களை விவரி.
37) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
38) வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள் யாவை?
39) வாங்கும் திறனைப் பாதிக்கும் காரணிகள் யாவை? அவற்றை விளக்குக.
40) வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் யாவை?
41) கீழ்காண்பவற்றிற்கு காலக்கோடு வரைக.
1900 முதல் 1930 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து இந்திய நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.
42) **இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
i) மும்பை ii) பனாராஸ் iii) நாக்பூர் iv) மீரட்
v) சௌரிசௌரா

2x8=16

## பகுதி - IV

**குறிப்பு : i) பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

43) தமிழ் மறுமலர்ச்சியின் தோற்றம், வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதவும்

**(அல்லது)**

பன்னாட்டு சங்கத்தின் குறிக்கோள்கள் மற்றும் பணிகளை மதிப்பிடுக.

44) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.**
i) விந்திய மலை
ii) பாராதீப்
iii) பழவேற்காடு ஏரி
iv) பசுமை மாறா காடுகள்
v) நெல் விளையுமிடம்
vi) அகத்திய மலை உயிர்க்கோள பெட்டகம்
vii) வடக்கு ரயில்வே தலைமையகம்
viii) ஜாம்ஷெட்பூர்

**(அல்லது)**

**கொடுக்கப்பட்ட தமிழக வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
i) கோயம்புத்தூர்
ii) தேயிலை விளையுமிடம்
iii) சாத்தனூர் அணை
iv) கிழக்கு தொடர்ச்சி மலை
v) சென்னை
vi) கோடியக் கரை வனவிலங்கு சரணாலயம்
vii) கரூர்
viii) மதுரை

- - - - - - -

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com